முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆனி மாதம் 5 திகதி முதல்

சுபகிருது வருடம் ஆனி மாதம் 12 திகதி வரை

(19.06.2022 ஞாயிறு முதல் 26.06.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கந்தனாய் வாழுகின்ற ஞானியே
   கருணை மழைபொழியும் தவசியே
   சிந்தை வைத்து அரங்கன் நீ
   செகத்தினில் இந்தியா தமிழகத்தின்
2. தமிழகத்தின் எதிர்காலம் குறித்த
   தலைமை முனி என்பால் கேட்க
   நேமமுடன் சுபகிருது மிதுனதிங்கள்
   நான்கொன்று திகதிமேல் விய திகதிவரை
3. வரை நடக்கும் வாரநிகழ்வாக
   வருங்கால பலனாக ஆசியுரைப்பேன்
   கரைபடா வண்ணம் ஆளுமை
   கருணைபட மேலும் கீழுமாக இருக்க
4. இருக்கவே பேதம் கருதாதபடி
   இனமத சாதி வகுப்பு நிலை
   கருத்தில் கொள்ளா மக்களென
   கருணை காட்டி வழிநடத்திட
5. வழி காட்டும் பொருளாதார
   வளர்ச்சித் தரும் திட்டங்கட்கு
   இழிவிலா எவர்வழி குறுக்கீடிலா
   இணையிலா தலைமையே முன்னின்று
6. முன்னின்று செயல்படுத்த திட்டம்
   முழுமைபட மக்களை அடைந்து
   மண்ணுலகில் இந்தியா தமிழகம்
   மகத்துவமிக்க வளர்ச்சி காணும்
7. காணவே இந்தநிலை பெருக
   கவலைதரும் சுயநலநிலை
   ஞானவான்களால் முடிவு கண்டு
   நம்பிக்கைதரும் ஞான ஆட்சியாக மாறும்
8. மாறுதலை அடைய வேண்டுமாயின்
   மதவழி இறைவழி செயல்கள்
   ஆறுதலாக அனைவரிடமும்
   ஆக்கம் தருவதாக இருக்க வேண்டும்

9. வேண்டியே நல்லறிவு ஞானம்
வினை வெல்லும் சக்திகூட
தொண்டென சேவை ஆற்றும்
தேசிகன் ஞானவழி வரவேண்டும்

10. வேண்டியே வேலவன் வழிபாட்டுடன்
விடாது தருமமதை செய்து
தொண்டுவழி வர தெய்வஆட்சியாக மாறும்
தெரிவித்த வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஆனி மாதம் 5ம் நாள் **19.06.2022** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி **12**ம் நாள் **26.06.2022** ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

கந்தப் பெருமான் முருகப்பெருமானின் அவதாரமாக வாழுகின்ற மகாஞானியே எல்லையில்லாது மக்கள் மீது கருணை மழை பொழியும் மகாதவசியே அரங்கமகா தேசிகரே இந்தியா தமிழகத்தின் எதிர்காலம் குறித்து சித்தர்களின் தலைமை முனிவராகிய அகத்திய மகரிஷி எம்மிடம் வேண்டுகோள் வைத்திட யானும் சுபகிருது வருடம் ஆனி மாதம் **5**ம் நாள் **19.06.2022** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் **12**ம் நாள் **26.06.2022** ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மத்திய மாநில அரசுகளின் ஆட்சிமுறைமை கரைபடாத தூய ஆட்சி முறையாக இருப்பதுடன் சாதி வகுப்பு இனமத பேதா பேதங்கள் இல்லாமல் எல்லா மக்களும் ஒன்றேயென சமதர்மத்துடன் கருணைகாட்டி நடத்திட வேண்டும்.

ஆட்சி தலைவர்களே பொருளாதார வளர்ச்சி திட்டங்களில் குறுக்கீடுகள் இல்லாமல் நேரிடை பார்வையில் வைத்து திட்டங்களை செயல்படுத்தி திட்டங்களின் பயன்கள் எல்லாம் முழுமையாக மக்களுக்கு சென்றடையும் விதமாக தூய்மையுடன் செயல்பட்டு வந்தால் இந்தியா தமிழகம் அபரிதமான வளர்ச்சியை விரைந்து அடைந்திடும்.

இப்படிப்பட்ட தூய வழிமுறைகளை செயல்படுத்த செயல்படுத்த கவலை தரும் சுயநல ஆட்சிகள் அறிவுமிக்க ஞானவான்களால், ஞானிகளின் ஆசியால் முடிவிற்கு வந்து நாடெங்கும் நம்பிக்கை தரும் ஞானஆட்சியாக மாறிடுமப்பா.

இப்படிப்பட்ட நல்ல மாறுதல்களை நாடு அடைந்திட வேண்டுமாயின் மதத்தின் வழியாகவும் கடவுள் வழிபாடுகளின் மூலமாகவும் செய்யப்படும் கடவுள் நம்பிக்கை மக்களிடம் அதிகமாகிட கடவுள் நம்பிக்கை மக்களிடம் பெருகிடும், புண்ணிய செயல்கள் பெருகிடும் மக்களின் செயல்கள் எல்லாம் ஆக்கம் தரும் செயல்களாக ஆகிடும்.

ஆகவே மக்களுக்கும் மற்றவர்க்கும் நல்லறிவும் ஞானமும் பெருகிட வேண்டுமாயின் வினை வென்று ஞானம் பெருகிடவே உலக மக்களின் நலனிற்காகவே தவப்பலனை தானமாக அளித்து அற்புத சேவை புரியும் அரங்கமகா தேசிகர் கூறும் தூய ஞான நெறிகளை ஏற்று சன்மார்க்க நெறி நின்று அரங்க மகானை பின்தொடர்ந்திட வேண்டுமப்பா. ஞானத்தலைவன் முருகப்பெருமானை வழிபடு தெய்வமாக ஏற்று வழிபாடுகளை செய்து வருவதுடன் விடாமல் இயன்ற அளவு தருமங்களை செய்து வருவதுடன் மக்களுக்கு தொண்டுகளையும் செய்து வரவர ஆட்சி முறையே

தெய்வீக ஆட்சியாக தெய்வபலம் மிக்க ஞானிகள் சூழ்ந்த ஞான ஆட்சியாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

**–சுபம்–**